DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-53/2021

Prosecution witness - PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முருகவேல் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present)

05.02.2026- 04.50 PM

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் சண்முககுமாரபுரம் கிராமத்தில் குடியிருந்து டிரைவராக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 ஐத் தெரியும். பட்டியல் சாட்சிகள் 3- காயம்பு, 4. விஜயராஜனைத் தெரியும்.

2. சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் எனது மாமா கருப்பசாமி பூப்பாண்டியபுரம் அருகே விறகு வெட்டிவிட்டு மதியம் சுமார் 03.00 மணியளவில் இ.சி.ஆர் ரோட்டிலுள்ள விஜய் டிப்பர் கடைக்கு அருகே வரும் போது இருசக்கர வாகனத்தில் அடிபட்டு கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டது. சம்பவ இடத்திலிருந்த நானும் காயாம்பு மற்றும் விஜயராஜனும் எனது மாமாவை தூக்கி பார்த்துவிட்டு எனது மாமா மகன் முனீஸ்வரனுக்கு போன் மூலம் தகவல் சொன்னோம். எனது மாமாவை 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். போலீசார் விசாரிக்கவில்லை.

<u>பிறழ் சாட்சி</u>:-

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: -</u>**

கடந்த 27.07.2020ம் தேதி எனது மாமா பூப்பாண்டியுபுரம் அருகே விறகு வெட்டி விட்டு மதியம் சுமார் 02.50 மணியளவில் இராமநாதபுரம் - சாயல்குடி

இ.சி.ஆர் ரோட்டில் விஜய் டிப்பர் கடைக்கு கிழக்கு பக்கமாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இடது புறமாக வந்து கொண்டிருந்த போது அதே திசையில் வந்த பின்னால் பெயர் விலாசம் கேட்டுத்தெரிந்த கடலாடி தாலுகா மங்களத்தை சேர்ந்த கணேசன் மகன் முனீஸ்வரன் என்பவர் TN 65 AW 0126 பேசன் புரோ என்ற இருசக்கர வாகனத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து எனது மாமாவின் மீது மோதியதில் எனது மாமா தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்ததில் அவருக்கு வலது காலில் ரத்தக்காயமும், இடது தொடையில் ரத்தக்காயமும், தலையில் வீக்கக்காயமும் ஏற்பட்டது என்றும், அந்த வழியாக வந்த நானும், காயாம்பு மற்றும் விஜயராசுன் ஆகியோர் எனது மாமாவை தூக்கி பார்த்துவிட்டு அ.சா.1 க்கு போன் மூலம் தகவல் சொன்னதாகவும் நான் எனது மாமாவை 108 ஆம்புலன்ஸ் மூலம் இராநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியிடம் சமதாதானம் செய்து கொண்டு எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.05 21:25:38 +0530